பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 06 வெள்ளிக்கிழமை 19.04.2024 கதிர் 163

## இது இரகசியம் அல்ல!

அடுத்த மாதத்தில் இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் மீண்டும் ஒரு இராஜதந்திர முரண்பாடு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழர்களின் இனப்படுகொலை தொடர்பான கனடாவின் நிலைப்பாட்டினால் இந்தச் சர்ச்சை ஏற்படவுள்ளது. இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்று கனேடிய பிரதமர் கடந்த வருடம் தெரிவித்திருந்தார். மே 18 இனப்படுகொலை நாளையொட்டி அவர் வெளியிட்ட பதவு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்திருந்தார். கனேடிய நாடாளுமன்றத்திலும் இது தொடர்பான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெற்றது தமிழ் இனப் படுகொலை என்கிற நிலைப்பாடு கனடாவின் அயலுறவுக் கொள்கையில் இன்னமும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்றாலும், கனேடிய ஆளும் தரப்பின் முயற்சிகள் அதைச் சாத்தியமாக்கிவிடுமோ என்கிற ஐயப்பாடு இலங்கை ஆட்சியாளர்களுக்கு இருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் இன அழிப்புத் தொடர்பில் ☞ 2

# யாழ்ப்பாணத்தில் சுண்ணக்கல் அகழ்ந்து திருமலைக்கு கடத்தல்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டடத்தில் சிறிதரன் எம்.பி. நேற்றுக் கொந்தளிப்பு

யாழ்ப்பாணத்தில் நள்ளிரவில் சுண்ணகற்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டு திருகோணமலைக்கு கடத்தப்படுகிறதா என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் இருந்து நள்ளிரவு வேளை ☞ 2

## "ஏமாற்றப்பட்டோம்"

### கர்தினால் மல்க்கம் ரஞ்சித் கவலை

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடக்கும் என்று நம்பிய நாங்கள் ஏமாற்றப்பட்டோம் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்த கர்தினால் அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தான் அதிகாரத்திற்கு வந்ததும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதாக கோட்டாபய ராஜபக்ச உறுதியளித்தார். எனினும் அது இடம்பெறவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கையைப் பெற்றுக்கொண்ட பின்னர் கோட்டாபய ராஜபக்ச விசாரணைகளை காலவரையறையின்றி பிற்போட்டார்.

ஒரு கட்டத்தில் நாங்கள் ஏமாற்றப்பட்டோம். பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஜனாதிபதி என்னை ☞ 2

## இளைஞர்கள் எதிர்பார்க்கும் நாட்டை உருவாக்க முடியும்

### நம்பிக்கை வெளியிட்டார் ரணில்

இளைஞர்கள் எதிர்பார்க்கும் இலங்கையை உருவாக்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கை தனக்கு இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்த இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது கடினமானது எனப் பலரும் கூறிய போதும் அந்த சவாலை ஏற்றுக்கொண்டு, இரண்டு வருடங்களுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வந்ததாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கு ஒற்றுமை ஒன்றே தேவையெனவும் தெரிவித்தார்.

நுவரெலியா ☞ 2

## வீதிக்கு இறங்கிய மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப மாற்றம்

### 2 வருடங்களில் செய்யப்பட்டதாக மனுஷ தெரிவிப்பு

மக்கள் வீதிக்கு இறங்கி மாற்றத்தை ஏற்படுத்தும்படி கூச்சலிட்டனர். அதற்கமைய கடந்த இரண்டு வருடங்களில் தேவையான கொள்கை மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

முறைமை மாற்றத்தை கோரி சுமார் இரண்டு வருடங்களாக மக்கள் தெருக்களில் இறங்கி கூச்சலிட்டனர். ஆனால் ஒட்டுமொத்த மக்களும் இந்த முறைமையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என நினைத்தனர். ஆனால் மக்கள் அங்கு மனமாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. அதனால் தான் எங்களுக்கு தேசிய கொள்கைகள் தேவைப்பட்டன. யார் மாறினாலும் மாறாத திட்டத்தைத் தயாரிக்க விரும்பினோம். கடந்த இரண்டு வருடங்களில் எமது அமைச்சு அந்த வேலைத்திட்டத்தை சரியாகச் செய்துள்ளது.

நாங்கள் குடியகல்வு கொள்கையை ☞ 8

## சுதந்திரக் கட்சியின் மறைமுக தலைவராக ரணிலே வருவார்

### மரிக்கார் எம்.பி. சாடல்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வமற்ற தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார். அதனை அடிப்படையாகக் கொண்டே அமைச்சுப்பதவிகளை வகிக்கும் சுதந்திர கட்சி உறுப்பினர்கள் தற்போது செயற்பட்டுக் கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறீலங்கா சுதந்திர கட்சியின் உத்தியோகபூர்வமற்ற தலைவராகவுள்ளார். சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் நீடிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றத்தால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஆளும் தரப்பில் அமைச்சுப்பதவிகளை ஏற்றுக் கொண்டுள்ள சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களே முன்னாள் ☞ 2

## சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு ஒத்துழைப்பு

### இறையாண்மைப் பத்திர மறுசீரமைப்பு விடயத்தில்

இலங்கை மற்றும் இறையாண்மை பத்திர உரிமையாளர்களுக்கு இடையிலான பேச்சுக்குஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி ரொயட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இருதரப்பினருக்கு இடையில் கொள்கையளவிலான இணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் உத்தியோகபூர்வ மதிப்பீட்டை முன்வைக்கவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் செயற்படுத்தப்படும் சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்துடன் இணங்கும் வகையில், இறையாண்மை பத்திர மறுசீரமைப்பு தொடர்பில் இருதரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது,

இதனிடையே, இலங்கையின் 12.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறையாண்மைப் பத்திரங்களை, மே மாத நடுப்பகுதியளவில் மறுசீரமைப்பதற்கான இயலுமை கிடைக்கும் என, இறையாண்மைப் பத்திர உரிமையாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தரப்பான ஸ்டான்டட்சார்ட்டட் ஆய்வு நிறுவனத்தை ☞ 8

## ஒக்டோபர் 17க்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்

### ஐ.தே.க. தவிசாளர் திட்டவட்டம்

ஒக்டோபர் 17 அல்லது அதற்கு முன்பாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

சிறீகொத்தவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதல பதாளத்தில் வீழ்திருந்த நாட்டைத்தான் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார் என்பதை மீளவும் நினைவுபடுத்துவதற்கு விரும்புகின்றோம்.

ஆகவே ☞ 8

## இன்னும் சில நாள்களில் இரவுநேரம் நாடாளுமன்றம் கலைக்கப்படுமா?

### நளின் பண்டார எம்.பி. கிளப்பும் சந்தேகம்

இன்னமும் சில நாட்களில் இரவுப் பொழுதொன்றில் நாடாளுமன்றம் கலைக்கப்படுமா என்ற சந்தேகம் எமக்குள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய நேரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று கூறிக்கொண்டிருக்கின்றார். அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியும் அவருடன் இணையவுள்ளதாகக் கடந்த காலங்களில் கூறினார்.

தற்போது தேர்தலுக்கு மிகக் குறுகிய காலமே இருக்கின்றது. ஆனால் அவர் கூறியதைப் போன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து எவரும் அவரது பக்கத்துக்குச் செல்லவில்லை. ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்த விடயம் நடைபெறவில்லை என்பதால் இன்னமும் சில நாட்களில் இரவுப் பொழுதொன்றில் நாடாளுமன்றம் கலைக்கப்படுமா என்ற ☞ 8

## மியன்மர் நாட்டிலிருந்து மீட்கப்பட்ட 8 இலங்கையரும் நாடு திரும்பினர்

மியன்மார் - தாய்லாந்து எல்லையில் ஆயுதம் தாங்கிய குழுவொன்றின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட 8 இலங்கையர்களும் நேற்று நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.

சிறீலங்கன் எயார் லைன்ஸ் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானத்தின் மூலம் காலை 9.35 அளவில் அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

ஏனைய 48 பேரையும் மீட்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜானக பண்டார தெரிவித்துள்ளார்.

மியன்மார் - தாய்லாந்து எல்லையில் ஆயுதம் தாங்கிய குழுவொன்றின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் இலங்கை இளைஞர், யுவதிகள் 56 ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கனடாவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் நினைவுச் சின்னம் இரு நாடுகளுக்கும்இடையிலானஅடுத்த சர்ச்சைக்குரிய மையப் புள்ளியாக இருக்கின்றது.

கனடாவில் உள்ள பிராம்ப்டன் நகர சபை தமிழ் இனப்படுகொலை நினைவிடத்திற்கான இறுதி வடிவமைப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலைநினைவுதினமாக அங்கீகரித்து நினைவுச்சின்னம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களின் நினைவாக பிரமாலியா பகுதியில் உள்ள Chinguacousy பூங்காவில் 4.8 மீட்டர் உயரமுள்ள துருப்பிடிக்காத எஃகு நினைவுச்சின்னம் அமைக்கப் படுகிறது. மே 18 அது திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்நிலையில், தமிழ் இனப்படுகொலைநினைவுச்சின்னம் கட்டியெழுப்ப கனடாவில் உள்ள நகர சபையின் முயற்சிகளை முறியடிப்பதிலும் இனப்படுகொலைத் தொடர்பில் கனேடிய அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டுகளுக்குபதிலளிப்பதிலும் இலங்கை ஆட்சியாளர்கள் தோல்வி கண்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு கொழும்பில் எழத் தொடங்கியிருக்கின்றது.

அடுத்த மாதம் இலங்கை அரசு போர் வெற்றியைக் கொண்டாடும்போது இனப்படுகொலை தொடர்பான தீவிரமான குற்றச்சாட்டுகளைகனேடியஅரசியல் தலைவர்கள்முன்வைக்கலாம்எனக் கொழும்புஇராஜதந்திரவட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. இதன் காரணமாகவே ஆட்சியாளர்கள் மீது கோபம் திரும்பியுள்ளது. இந்த விடயம் குறித்து இலங்கை மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பதாகவும் குறித்த இராஜதந்திர அதிகாரி ஒ-ருவர் கூறியிருக்கிறார்.

கடந்த காலங்களில் இனப்படு கொலை குறித்து கனடா பல்வேறு குற்றச்சாட்டுகளைமுன்வைத்திருந்த போதிலும், இலங்கை அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தது. ஆனால், இலங்கையில் இனப்படுகொலை நிகழவில்லை என்று கனேடிய அரசியல்தலைவர்களைநம்பவைக்க இலங்கை இராஜதந்திரத் தரப்பால் முடியவில்லைஎன்பதையேஅங்கு எழுப்பப்பட்டுவரும் நினைவுச் சின்னம் எடுத்துக்காட்டுவதாக கொழும்பு சீற்றம் கொண்டுள்ளது.

வேறு நாடுகளும் கனடாவைப் பின்பற்றி இனப்படுகொலைத் தீர்மானத்திற்கு வந்தால் பன்னாட்டு அரங்கில் இலங்கை மேலும் அதிக நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டி வரும் என்பதேகொழும்பின்கவலைக்குக் காரணம்.

.................

கொழும்பில் நேற்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும் உலகின் முதல் பெண் பிரதமருமான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் 108ஆவது பிறந்தநாள் நிகழ்வு இடம்பெற்றது. பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் கட்சியின் இரு அணித் தலைவர்களையும் ஒன்றாகக் காண முடிந்தது. ஒருவரை ஒருவர் பார்த்ததும் கைகளைக் கூப்பி வணக்கம் வைத்து முகமன் கூறிக்கொண்டனர்.

சுதந்திரக் கட்சிக்குள் யார் கட்சியைக்கட்டுப்படுத்துவது என்கிற குடும்பிப்பிடிச் சண்டை நடந்து வருகின்றதுஎன்பதுவாசகர்களுக்குத் தெரியும். கட்சித் தலைவரான மைத்திரிபாலசிறிசேனவுக்குஎதிராக கட்சியின் நிறுவுனரின் மகளும் முன்னாள்தலைவருமானசந்திரிகா பண்டாரநாயக்க -குமாரணதுங்க தாக்கல் செய்த வழக்கில், மைத்திரி கட்சித்தலைவராகச்செயற்படுவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இதையடுத்து சந்திரிக்கா தலைமையில் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை பதில் தலைவராக நியமித்தனர். மத்திய செயற்குழுவின் பெரும்பான்மையானவர்கள் இந்த முடிவுக்கு ஆதரவு என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த நகர்வுகளுக்குஒருபின்புலம்உண்டு. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி தலைமையில் ஒரு புதிய கூட்டணியை உருவாக்கி அதன்சார்பில்ஜனாதிபதிவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு மைத்திரி முயற்சி செய்தார். நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவையே அப்படி ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு காய்கள் நகர்த்தப்பட்டன.

சிறிமாவோவின் நேற்றைய நிகழ்விலும் விஜயதாச கலந்துகொண்டிருந்தார். மைத்திரி அணியினருடனேயே வந்திருந்த விஜயதாச, மைத்திரிக்குப் பக்கத்திலேயே நிகழ்வு முழுவதும் அமர்ந்திருந்தார். அதுமட்டுமல்ல சிறிமாவோ பற்றிய பிரதான நினைவுரையையும் அவரே ஆற்றினார். அந்த உரையில் சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சியமைக்கும் வரை அதாவது ஆளும் தரப்பாகும் வரை தான் சாகமாட்டேன் என்றெல்லாம் வீரவசனங்களும் பேசினார்.

இப்படி விஜயதாசவை அடுத்த ஜனாதிபதிக்கான போட்டியில் களமிறக்க மைத்திரி அரசியல் நகர்வுகளைத் தொடங்கியதும் தற்போதுரணில்விக்கிரமசிங்கவுடன் சேர்ந்துகொண்டு அமைச்சுப் பதவிகளைத் தம் வசம் வைத்திருக்கும் கட்சியின் மூத்த தலைவர்கள் ஒன்று சேர்ந்துதான் மைத்திரியை கட்சித் தலைவர் பதவியிலிருந்து அகற்றுவதற்கான நீதிமன்ற செயற்பாடுகளில் களம் குதித்தனர். இதன் பின்னணியில் ரணிலின் கைவண்ணம் இருக்கும் என்பதை ஊகிப்பது சிரமமானதல்ல. சந்திரிக்காவையும் அவர்கள் தம்மோடுஇணைத்துக்கொண்டனர்.

இப்படிக் கட்சிக்குள் அதிகாரத்திற்காக அடித்துக்கொண்ட இரு தரப்புத் தலைவர்களுமே நேற்றைய நிகழ்வில் ஒன்றாகக் கலந்துகொண்டிருந்தனர். ஆளுக்காள் அன்பைப் பரிமாறிக் கொண்டனர். உள்ளே எவ்வளவு கோபம், வன்மம் இருந்தாலும் வெளியே எப்படி நடிப்பார்கள் என்பதைப் பார்ப்பதற்கு இது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தாலும், நேற்றைய நிகழ்வில் சந்திரிக்கா மிஸ்ஸிங்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுண்ணகற்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டு திருகோணமலைக்கு கொண்டு செல்லப்படுவதாக மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளார்கள். இது தொடர்பில் மக்களால் முறையிடப்பட்ட இடங்களைப் பார்வையிட்டபோது அங்கு 20 முதல் 25 அடிவரை அகழப்பட்டு இருக்கிறது.

அவ்வாறு அகழப்பட்ட சுண்ணகற்கள் வேறொரு இடத்தில் சேகரிக்கப்பட்ட பின்னர் பின்னர் நள்ளிரவு வேளை திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

இந்த செயற்பாட்டிற்கு யார் அனுமதி வழங்கியது? கற்களை அகழ்வதற்கு எந்தத் திணைக்களம் பொறுப்பு கூறுவது? இராணுவம், பொலிஸாரின் அனுமதியுடன் இது நடைபொறுகிறதா? யார்தான் பொறுப்பு கூறுவது?

நாளொன்றுக்கு 12 முதல் 14 கன்டர், டிப்பர் வாகனங்களில் கற்களைக் கொண்டுசெல்கிறார்கள். நள்ளிரவில் இந்த வேலைகள் நடகிறது. இரவு கடமையில் நிற்கும் பொலிஸார் இராணுவத்தினர் இதனை கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்குகிறார்களா?

ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் இணைத்தலைவர்களில் ஒருவராகிருக்கிறார். அமைச்சரும் இணைத்தலைவர்களில் ஒருவராக இருக்கிறார். யாரின் அனுமதியுடன் இந்தவிடயம்நடக்கிறது?உடனடியாக இதனை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார்.

அவரது கேள்வியை அடுத்து, இரவு நேரத்தில் கடமையில் இருக்கும் பொலிஸாரும் இராணுவத்தினரும் வீதியில் செல்லும் கனரக வாகனங்கள், டிப்பர்களைச்சேதனைசெய்து, உரிய அனுமதிகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டார்.

# ஆளும் தரப்புடன் உள்ள ஒரு குழு சு.கவை கைப்பற்ற முயற்சிக்கிறது

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தபடியே ஆளும் தரப்புடன் இணைந்துள்ளகுழுவினர்கட்சியைக் கைபற்ற முயற்சிக்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

கொழும்பில்செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது பொதுச் செயலாளர் பதவி பறிக்கப்பட்டுஇடைநிறுத்தப்பட்டபோது நான் கட்சியிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக தலைவரிடத்தில் எனக்கு எதிராகச் செயற்பட்ட குழு உங்களை இலக்கு வைத்துள்ளது என்று கூறினேன். தற்போது அது நடைபெற்றுள்ளது.

ஆளும்தரப்புடன்இணைந்துள்ள குழுவினர் கட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர். தற்போது அந்த விடயம் வெட்ட வெளிச் சமாகின்றது.

கட்சியின் பதவிநிலைகளுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில் முதலாவது பிரதிவாதியாக இருப்பவர் மைத்திரிபாலசிறிசேன. இரண்டாவது பிரதிவாதியாக இருப்பவர் பொதுச் செயலாளர்மூன்றாவதுபிரதிவாதியாக இருப்பவர் நிமல் சிறிபால டி சில்வா. ஆனால் அவர் தற்போது பதில் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆகவே இந்தநிகழ்ச்சிநிரலானது கட்சியைரணில்விக்கிரமசிங்கவின் மடியில் வைத்துக்கொள்வதற்கு ஒருகுழுவினர் முயற்சிக்கின்றனர் என்பதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. ஆகவேகட்சியையும், அங்கத்தவர்களையும் பாதுகாப்பதற்குநாம்துணையாகஇருப்போம் என்றார்.

## ஏமாற்றப்பட்டோம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றினார். 2019 உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பாரதூரதன்மையை அனைத்து கட்சிகளும் தலைமைகளும் உணர்ந்து இதுகுறித்து விசாரணைகளைமேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## இளைஞர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளம் அரசியல் பிரதிநிதிகளுடன் நேற்று நுவரெலியாஜனாதிபதிமாளிகையில் இடம்பெற்றசந்திப்பிலேயேஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நுவரெலியா, ஹங்குரங்கெத்த, மஸ்கெலியா, கொத்மலை மற்றும் வலப்பனை ஆகிய தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும்ஐக்கியதேசியகட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட பலகட்சிகளின் இளைஞர் பிரதிநிதிகள் குழுவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததுடன், நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடினர்.

நுவரெலியா மாவட்டத்தை சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கான ஆளும் தரப்பின் வேலைத்திட்டத்தை சிலர் விமர்சித்து வருவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அபிவிருத்தித்திட்டத்திற்கு அனைவரினதும்ஆதரவுகிடைத்தால் அந்த திட்டங்களை நாட்டின் பொருளாதாரத்தில் திருப்புமுனையாக மாற்ற முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

பழமையான அரசியலில் ஈடுபட்டு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும், நாட்டுக்கு தேவையான முதலீடுகளை ஈர்த்து நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அனைவரும்இணக்கமாகசெயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

ஆளும் தரப்பின் சரியான பொருளாதார வேலைத்திட்டத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஸ்தீரத்தன்மையினால் இந்த வருடம் மக்கள் சிங்கள, தமிழ் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடியதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இன்று சகல துறைகளிலும் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வோடு, மக்களின் வருமான மூலங்களும் அதிகரித்து வருவதாகவும், இந்த பயன் அனைத்து மக்களுக்கும் கிடைக்கவேண்டும்என்பதேதனது நோக்கம் என்றும் தெரிவித்தார்.

இளம் அரசியல்வாதிகள்

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

# ஈ.பி.டி.பி கட்சி நிதியிலிருந்து 50 மீனவர்களுக்கு வலைகள்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்







பாசையூகடற்றொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டை அடிப்படையாக கொண்டு அவர்களது தொழில் நடவடிக்கைகளுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது கட்சியின் நிதியிலிருந்து முதற்கட்டமாக சுமார் 50 கடற்றொழிலாளர்களுக்கு30ஆயிரம் ரூபா பொறுமதியான வலைகளை நேற்று வழகிவைத்துள்ளார்.

பாசையூ கடற்றொழிலாளர் சங்கத்தில் இடம்பெற்றது நிகழ்வில் மீனவர்களுக்கு வலைகள் வழங்கப்பட்டன. 700இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்களை உள்ளடக்கிய குறித்த கடற்றொழிலாளர் சங்கத்தினர் தமது தொழில் நடவடிக்கைகளில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் கொண்டுசென்றிருந்தனர்.

இதையடுத்துகுறித்ததரப்பினரது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது வாழ்வாதார பொருளாதார ஈட்டலுக்கான நடவடிக்கைகளைமேற்கொள்வதாக தெரிவித்திருந்தார்.

இதையடுத்து பொருளாதார ரீதியில் மிகவும் நலிவுற்ற 350 கடற்றொழிலாளர்களின்நலன்களை கருத்திற்கொண்டு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளை தனது கட்சியின் நிதியிலிருந்து கொள்வனவுசெய்துவழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதனடிப்படையிலேயே முதற்கட்டமான 50 கடற்றொழிலாளர்களுக்கு இன்றையதினம் 30 ஆயிரம் ரூபா பெறுமதியிலான வலைகள் அமைச்சரால் வழங்கிவைக்கப்பட்டிருந்தது.

அத்துடன் எஞ்சிய 300 கடற்றொழிலாளர்களுக்கும் விரைவில் குறித்த பெறுமதியிலான வலைகளை வழங்குவதற்கு எற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இதன்போது குறித்த கடற்றொழிலாளர்கள்தமதுதொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக எரிபொருள் தாங்கி ஒன்று தமது பகுதியில் அமைப்பட வேண்டும்என்றும்அதற்கானகாணி இன்மையால் அதற்கும் ஏற்பாடு செய்துதருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கோரிக்கையின் தேவைப்பாட்டைகருத்திற்கொண்டஅமைச்சர் குறித்த பகுதியில் அதற்கான அமைவிடம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததுடன் அதற்கான சட்டரீதியிலான நடவடிக்கைகளை குறித்த பிரதேசத்தின் கிராம அலுவலரை மேற்கொள்ளுமாறும் பணித்தார்

# மனிதாபிமானியாகவும் ஜனரஞ்சக அரசியல்வாதியாகவும் இலங்கை அரசியலில் பேசப்பட்டவர் பாலித தேவப்பெரும

## சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அனுதாபம்



(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும்,முன்னாள் பிரதி அமைச்சராகவும் 2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்தை அலங்கரித்த சகோதரர் பாலித தேவரப்பெருமவின் இழப்பு எமது நாட்டின் மனிதாபிமான அரசியலில் வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீ ல.மு.கா பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பாலித குமார தெவரபெரும அவர்கள் இலங்கை அரசியலில் நாட்டின் சகல மக்களாலும் மனிதாபிமானியாகவும், ஜனரஞ்சக அரசியல்வாதியாகவும் பேசப்பட்ட ஒருவராவார். மத்துகம பிரதேச சபையின் தலைவராக, மேல் மாகாண சபை உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக, உள்நாட்டு அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சராக, வன விலங்கு பிரதி அமைச்சராக பணியாற்றிய அவர் குறிப்பிடத்தக்க சேவைகளை மக்களுக்கு செய்துள்ளார்.

நாட்டு மக்கள் கஷ்டப்பட்ட போது இன, மத, பிரதேச பாகுபாடுகள் இல்லாது வீதிக்கு இறங்கி மக்கள் தொண்டாற்றிய அவரின் திடீர் இழப்பு பலத்த கவலையை என்னுள் மட்டுமல்ல நாட்டில் உள்ள சகலருக்கும் தோற்றுவித்துள்ளது.

அவரின் இழப்பால் துயருற்ற அவரது குடும்பம், நண்பர்கள், ஆதரவாளர்கள் எல்லோருக்கும் எனது ஆறுதல்களையும், எனது இரங்கல்களையும் தெரிவித்து கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.(05)

# நெகிழ்ச்சியான முறைமையில் புத்தாண்டை கொண்டாடிய சந்திரிக்கா பண்டாரநாயக்க





(அஸ்ஹர் இப்றாஹிம்)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க, கொழும்பு நகரில் தேவைகள் கொண்ட மக்களுக்கு உணவுப்பொதிகளைவழங்கிதமிழ்சிங்களபுத்தாண்டை கொண்டாடியுள்ளார்.

குறித்த உணவுப்பொதிகள் அவரால் மூவின மக்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

ஆடம்பரம் எதுவுமின்றி மிகவும் எளிமையான முறையில் இதன் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா நடந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (05)

# கட்டுத்துப்பாக்கி வெடித்தது குடும்பஸ்தர் ஒருவர் காயம்

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் கட்டுத்துப் பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்கப்பட்டுள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) பிற்பகல் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

புதுக்குடியிருப்பு கைவேலி மயில்குஞ்சன் பகுதியை சேர்ந்த 33 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

குறித்த நபர் தமது வீட்டிலிருந்து தேவிபுரம் (ஆ) பகுதியிலுள்ள காட்டுப் பகுதியால் சென்ற போது விலங்குகளை வேட்டையாடுவதற்காக பயன்படும் கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

இதனால் காயமடைந்த அவர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பிட்டிகல பகுதியில் துப்பாக்கிச்சூடு சந்தேகநபர்கள் மூவர் கைது

கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி பிட்டிகல பொலிஸ் பிரிவிற்குற்பட்ட ஹொரங்கல்ல, நியாகம பகுதியில் இருவரை சுட்டுக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் பொரலஸ்கமுவ , ரத்னபிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

22 , 24 மற்றும் 31 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் பிட்டிகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பிட்டிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட மாளிகாகந்த சந்தேகநபர் தப்பியோட்டம்

ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் கிராண்ட்பாஸ் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பில் மாளிகாகந்த நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போது பொலிஸ் பாதுகாப்பில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவிசாவளை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் ஏனைய சந்தேக நபர்களுடன் மாளிகாகந்த நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டபோதே பொலிஸ் பாதுகாப்பில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார்.(05)

# குடாநாட்டில் குழாய்க் கிணறுகளால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து ஆய்வுசெய்ய நடவடிக்கை

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணத்தில் குழாய்க்கிணறுகளைத் தோன்றுவது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு முடிவெடுப்பது என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோரின் இணைத்தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

அதன்போது யாழ்ப்பாணத்தில் அனுமதியற்ற முறையில் அதிகளவான குழாய்க்கிணறுகள் அடிக்கப் பட்டு வருவதாகவும் , அதனால் நிலத்தடி நீர் அற்று போகும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப் பட்டது.

அதனைத்தொடர்ந்து கூட்டத்தில் வாதபிரதிவாதங்கள் எழுந்தன. அதனை அடுத்து குழாய்க்கிணறு அடிப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு ,அதன் அடிப்படையில் அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் முடிவெடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி அவற்றை முற்றாக கட்டுப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (05)

# பாலமுனை கடற்கரையில் பெண்ணின் சடலம் மீட்பு



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவிற்குள் அடங்கும் பாலமுனை கடற்கரையோரம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மதியம் 12 மணியளவில் பாலமுனை கடற்கரையோரம் கரை ஒதுங்கிய குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சுமார் 55 வயது மதிக்கத்தக்க குறித்த பெண் எவ்வாறு மரணமானார் என்பது குறித்த விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பெண்ணின் சடலம் தற்போது காத்தான்குடி பாலமுனை கடற்கரையோரம் வைக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பிரச்சினை ஒன்றுமட்டுமல்ல

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்து 5 வருடங்கள் பூர்த்தியாக இன்னும் ஒரு நாள் மட்டுமே இருக்கின்றது. 2019 ஏப்ரல் 21 ஒட்டுமொத்த நாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய அந்தக் குண்டுவெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டன. இதில் வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 273 பேர் கொல்லப்பட்டனர். 500க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இஸ்லாமிய தீவிரவாதக் குழுவைச் சேர்ந்தவர்களான சஹ்ரான் தலைமையிலான சிலரே இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தினார்கள் என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். அது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகளும் விசாரணையில் உள்ளன. இருந்தாலும் சஹ்ரான் குழுவினர் இத்தகைய குண்டுவெடிப்புக்களை நடத்துவதற்குத் திட்டமிட்டு யாரால் தூண்டப்பட்டனர் என்கிற கேள்வியும் இந்தக் குண்டு வெடிப்புக்களால் யாருக்கு நன்மை கிட்டியது என்கிற கேள்வியும் அதன் பின்னர் பூதாகாரமாக எழும்பியது. இந்தக் குண்டுவெடிப்புக்களுக்குப் பலமான அரசியல் பின்புலமொன்று இருக்கின்றது என்று இலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் நம்புகின்றார்கள். எனவேதான் அது பற்றிய பக்கச்சார்பற்ற முறையான விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றார்கள்.

மக்களின் அந்தக் கோரிக்கை இதுவரையில் இலங்கை ஆட்சியாளர்களால் நிறைவேற்றப்படவில்லை. இதனால் கத்தோலிக்கச் சமூக–மும் மக்களும் பெரிதும் விசனமடைந்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்கள். அத்தோடு மட்டும் நிற்காமல் போராட்டங்களிலும் ஈடுபடுகின்றார்கள். இந்த நிலையில்தான் ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தான் ஆட்சிக்கு வந்தால் இந்தக் குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்றை நடத்தப்போவதாக உறுதியளித்துள்ளது. அது தொடர்பான ஆவணம் ஒன்று கர்தினால் மல்க்கம் ரஞ்சித்திடம் அந்தக் கட்சியனால் கையளிக்கப்பட்டும் உள்ளது. அந்த அறிக்கையில்

1. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இனங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையை உருவாக்கி இனக் கலவரங்களை ஏற்படுத்தி பெருந்தொகையான உயிராபத்துக்களையும் ஆதன அழிவினையும் ஏற்படுத்தி குறுகிய அரசியல் நோக்கத்தை அடைவதற்காக ஏதேனுமொரு குழுவினால் நெறிப்படுத்தப்பட்ட சதித்திட்டமாக அமைவதோடு மேற்சொன்ன குற்றச்செயலுடன் தொடர்புடைய சூத்திரதாரியையும் திட்டமிட்டவர்களையும் சட்டத்தின்முன் கொண்டுவந்து நிறுத்தவேண்டியது தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் முதன்மைப் பணியாக அமைகின்றது,

2. உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொள்ள முன்னர் அது சம்பந்தமான சரியான தகவல்கள் கிடைத்திருக்கையில் அந்த தாக்குதலை தடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காத மற்றும் மேற்படி தாக்குதல் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட புலன்விசாரணைகளை திசை திருப்பி, அதன் உண்மையான சதிகாரர்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டு, மேற்படி தாக்குதலுக்கு உண்மையிலேயே பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை தடுத்த பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள், வேறு உத்தியோகத்தர்கள், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையை உள்ளிட்ட அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய ஒவ்வோர் அரசியல் அதிகாரிகளையம் சட்டத்தின்முன் கொண்டுவர நடவடிக்கை எடுத்தல்,

3. உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பாதிக்கப்பட்டவர்களால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் வழக்கில் தவறாளிகளாக காணப்பட்ட அரசியல் அதிகாரிகளுக்கும் அரச உத்தியோகத்தர்கள் மீதும், ஏற்கெனவே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அறிக்கையின் விதப்புரைகளில் உள்ளடக்கப்பட்ட அரசியல் அதிகாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மீதும் தராதரம் பாராமல் குற்றவியல்சார்ந்த குற்றச்சாட்டுகளை தாக்கல்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதோடு,

எதிர்காலத்தில் தேசிய மக்;கள் சக்தியின் ஆட்சியினால் இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பந்தமாக நியமிக்கப்படவுள்ள விசேட புலன்விசாரணை ஆணைக்குழுவின் விதப்புரைகளையும் அடிப்படையாகக்கொண்டு அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய அரசியல் அதிகாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் குற்றவியல்சார்ந்த குற்றச்சாட்டுகளை தாக்கல்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்,

4. இந்த தாக்குதல் தொடர்பாக தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்ற வழக்குகளை முந்துரிமை அடிப்படையில் இயலுமானவரை விரைவாக விசாரித்து நிறைவுசெய்யுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் வேண்டுகோள் விடுத்தலும் அதற்கு அவசியமான வசதிகளை வழங்குதலும்,

5. இந்த தாக்குதலுடன் தொடர்புடைய ஏற்கெனவே இந்நாட்டிலிருந்து தப்பியோடியுள்ள அனைத்துக் குற்றவாளிகளையும் இந்நாட்டுக்கு வரவழைப்பித்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகளை எடுத்தலும் இந்த தாக்குதலுக்கான திட்டம் தீட்டியவர்களையும் சதிகாரர்களையும் தராதரம் பாராமல் தண்டித்தலும்.

6. இந்த தாக்குதலில் பலியானவர்களின் உயிர்கள் மற்றும் ஆதனங்களுக்கான முறையான நட்டஈட்டு முறையியலொன்றை அறிமுகஞ்செய்தல், அவர்கள் அனுபவித்து வருகின்ற உளத் திரிபுநிலையிலிருந்து அவர்களை மீட்டெடுக்கக்கூடிய வகையிலான உளவியல்சார்ந்த வேலைத்திட்டமொன்றை அறிமுகஞ்செய்தல்,

7. இது சம்பந்தமாக நியமித்த விசேட ஆணைக்குழுக்கள் மற்றும் வேறு புலன்விசாரணைகள் மூலமாக வெளிக்கொணரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு தொடர்ந்தும் பல்வேறு புலன்விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் நிலவுவதால் அது சம்பந்தமாக மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு நீதி நிலைநாட்டப்படுவதை நோக்கமாகக்கொண்டு முழுமையான நீதித்துறை தத்துவம்கொண்ட விசேட புலன்விசாரணை ஆணைக்குழுவொன்றை நிறுவி அதன் விதப்புரைகளின்பேரில் மிகவும் குறுகிய காலத்திற்குள் இந்த தாக்குதலை மேற்கொள்ள சதித்திட்டம் தீட்டியவர்களுக்கும் பலவிதமாக அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினர்களுக்கும் எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை எடுக்கவும், அதனடிப்படையில் தண்டனை வழங்கவும் எந்தவிதமான தயக்கமுமின்றி தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி நடவடிக்கை மேற்கொள்ளுமெனவும் இலங்கை மக்களுக்கு இத்தால் அறிவிக்க விரும்புகிறோம் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அடுத்த தேர்தல்களின் மூலம் அதிகாரத்திற்கு வருகிறதோ இல்லையோ, இது விடயத்தில் அவர்களின் நிலைப்பாடு வரவேற்கப்படக்கூடியதே. ஒருவேளை ஆட்சிக்கு வந்தால் அவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்ப்போம். அதேநேரம், இந்த நாட்டில் விசாரிக்கப்படவேண்டியதாக இருப்பது உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் மட்–டுமல்ல என்பதையும் தேசிய மக்கள் சக்தி கவனத்தில்கொள்ளவேண்டும். தமிழ் மக்களுக்கும் இதுபோன்ற ஆயிரம் முறைப்பாடுகள் இருக்கின்றன. காணாமற்போனோர், போர்க் குற்ற விவகாரம் உள்ளிட்ட ஏராளமான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அவை பற்றியும் விசாரித்து உண்மைகளை வெளிக்கொண்டுவருவதுடன் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்கிற உறுதிமொழியை தேசிய மக்கள் சக்தி வழங்கவேண்டும். இல்லையேல் உயிர்த்த ஞாயிறு தொடர்பான அதன் வாக்குறுதிகளை, வாக்குவேட்டைக்கான வெறும் அரசியல் நாடகம் என்றே கொள்ளவேண்டியிருக்கும்.

# எது நிஜம்?

**என் சத்திய மூர்த்தி**

ஜனாதிபதி தேர்தல் நெருங்க-நெருங்க, அது குறித்த எதிர்பார்ப்புகள் கூடுகின்றதோ இல்லையோ, குழப்பங்களுக்குக் குறைவில்லை. அதில், தற்போதைக்கு முக்கியமான கேள்வி, ஜனாதிபதி ரணிலும், மொட்டு கட்சியின் ராஜபக்ச தலைமையும் ஒரே அணியில் பயணிப்பார்களா இல்லையா என்பதுதான்.

தென்னிலங்கை அரசியலை பொறுத்தவரையில், இதுவரை, ஜேவிபி வேட்பாளர் அநுர குமார திசநாயகவே ஜனாதிபதி வேட்பாளர்களில் முன்னணியில் இருப்பதாக கருத்துக் கணிப்புகள் கூறி வந்துள்ளன. முதல் சுற்றில் இல்லை என்றாலும், இரண்டாவது விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அவரே அடுத்த ஜனாதிபதி ஆவார் என்று ஆருடம் கூறிவந்தனர்.

ஆனால், அண்மைக் காலங்களில், அதில் ஒரு தொய்வு ஏற்பட்டுள்ளது. ஏன், அநுர ஆதரவு கருத்து கணிப்புகள் எல்லாம் கருத்து திணிப்புகள் என்ற அளவிற்கு வாய்மொழி செய்தி பரவ தொடங்கி உள்ளது. இந்த இரண்டில் எது உண்மை அல்லது இரண்டுமே உண்மையா அல்லது இரண்டுமே பொய்யா என்று கேள்வி எழுப்பினால், அது குறித்து பட்டி மன்றம் நடத்தலாம்.

அதே கருத்து கணிப்புகள், அநுரவிற்கு இரண்டாவது இடத்தில் சஜித் பிரேமதாசாவும் அவருக்கு வெகு தொலைவில் ரணிலும் இருப்பதாக கூறிவந்துள்ளன. இவர்களுக்கு எல்லாம் பின்னால், ஒற்றைபடை சதவீத வாக்குகளையே ராஜபக்சக்கள் பெறுவார்கள் என்றும் இந்த கருத்து கணிப்புகள் தொடர்ந்து அறிவித்து வந்தன.

இது உண்மை என்றால், தான் எவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியும் என்று ரணில் கருதுகிறார்? அதுவும் குறிப்பாக, ராஜபக்சக்களின் ஆதரவு தனக்கு தேவை என்றும் அவர் கருதிச் செயல்படுகிறார் அல்லது அவ்வாறு பாவனை செய்கிறார்?

இதில் இரண்டுவித எதிர்பார்ப்பு அல்லது தந்திரம் இருக்கின்றது. இதுவரை வெளியிடப்பட்டுள்ள தனியார் கருத்துக் கணிப்பு முடிவுகளில் இடைப்பட்ட ஒன்றே ஒன்றில் மட்டும் அநுர 51 சதவீத வாக்குகளை பெற்று முதல் சுற்றிலேயே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது போலச் செய்திகள் வெளியாகின. அதுவே அடுத்த காலாண்டு பருவத்தில், 50 சதவீதத்திற்கு கீழ் இறங்கிவிட்டது.

முதல் இரண்டு மூன்று சுற்றுகளில் எல்லாம், அநுரவின் வாக்கு எண்ணிக்கை முப்பது சதவீதத்தைச் சுற்றியே இருந்தது. அதில் இரண்டில், 10- முதல் 15 சதவீதம் குறைவாக சஜித் வாக்கு பெற்றார் என்று கூறப்பட்டு வந்தது.

**ஏன் இந்த ஆசை?**

இந்த எண்ணிக்கையில் ஏதாவது உண்மை இருந்தால், ரணிலுக்கு ஏன் இன்னமும் ஜனாதிபதி ஆசை? தான் நாற்பது ஆண்டு காலம் ஆளுமை செலுத்திய நாடாளுமன்றதிற்கே பின் வாசல் வழியாக மட்டுமே வர முடியும் என்று ஆன பின்னர். குருட்டாம் போக்கில், கோத்தபாய ராஜபக்ச செய்த தவறினால், அதே பின் வாசல் வழியாகவே அவர் ஜனாதிபதி பதவி ஏற்று, தற்போதும் தொடருகிறார். அப்படியே, மரியாதையாக அரசியலில் இருந்து ஒய்வு பெற்று செல்ல வேண்டியதுதானே?

அதில்தான் ஒன்றிரண்டு சூட்சுமங்கள் உள்ளன. அவை அப்பட்டமான அரசியல் தந்திரங்கள் மட்டுமே. ஒன்று, ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு இவர்கள் கூறுவதுபோல் பத்து அல்லது பன்னிரெண்டு சதவீத முதல் சுற்று விருப்பு வாக்குகள் மட்டுமே கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். என்றாலும், வேறு யாரும்கூட முதல் விருப்பு வாக்கு மூலம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், அப்போதைய நிலைமை என்ன?

அவரை எதிர்த்து போட்டியிட இருக்கும் அநுர மற்றும் சஜித் ஆகியோருக்கு முதல் விருப்பு வாக்கு அளிக்கும் தென்னிலங்கை வாக்காளர்கள், தங்களது இரண்டாவது விருப்பு வாக்குகளை யாருக்கு அளிப்பார்கள்? இரண்டு பக்கங்களில் இருந்தும், ரணில் தான் இரண்டாவது சுற்று விருப்பு வாக்குகளைப் பெறுவார் என்பதற்கான சாத்தியக்கூறுகளே அதிகமாக இருக்கின்றன.

அத்தகைய சூழலில், இரண்டாவது விருப்பு வாக்கு அடிப்படையில் ரணிலின் வெற்றி வாய்ப்பை உருவாக்குவதுதான், அவரது தரப்பின் முதல் திட்டமாக இருக்கிறது. அதனால்தான், மொட்டுக் கட்சியின் முக்கிய அமைச்சர்களை தங்கள் பக்கம் ஈர்த்துள்ளனர். அவர்கள் மூலம், ரணிலின் முதல் சுற்று விருப்பு வாக்குகளை 10- முதல் 15 சதவீதமாவது உயர்த்த முடிந்தால், இரண்டாவது விருப்பு வாக்குகளின் தேவை அந்த அளவிற்கு குறைந்துவிடும் என்பது அவர்கள் கணக்கு என்றே எண்ண தோன்றுகிறது.

இந்த தந்திரோபாயத்தில், மொட்டு கட்சியை உடைப்பது என்பது ரணிலின் திட்டமல்ல. ஆனால், அதுவே ரணிலின் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்ற சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு பொருந்தாது. இதில் ரணில் தரப்பின் எண்ணவோட்டம் எதுவாக இருந்தாலும், சஜித் தலைமை தங்களது கட்சியை உடைப்பதே ஜனாதிபதியின் முக்கிய திட்டம் என்றே கணக்கிடுவார்கள்.

இது போன்ற தவறான கருத்துக்கள் பரவாமலிருக்கவும்கூட, சிலர் இரு தரப்பினரையும் இணைப்பதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைகிறதோ இல்லையோ, ஜனாதிபதியாவதற்கும் நாடாளுமன்ற தேர்தல்களை எதிர்கொள்வதற்கும் ஒரு கூட்டணியாக இணைய வேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.

இதற்கு முட்டுகட்டை, சஜித்தின் ஜனாதிபதி பதவி மேலான ஆசைதான். கடந்த 2015 முதல் 20-19 வரையான காலகட்டத்தில், மைத்திரிபால சிறிசேனா ஆட்சிக் காலத்தில், வீட்டு வசதி மற்றும் கட்டமைப்புத் துறை அமைச்சராக இருந்தது மட்டுமே சொல்லிக்கொள்ளும் அளவிற்கான அவரது அரசு சார்ந்த அனுபவம்.

அந்த நான்கரை வருட அனுபவத்தை மட்டும் வைத்துக்கொண்டு, தற்போதைய பொருளாதாரம் மற்றும் புவிசார் அரசியல் சூழலில், நாட்டை வழிநடத்திச் செல்ல சஜித் சரியான தேர்வாக இருப்பாரா, என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்வியே, ஜே.வி.பி. அநுர-விற்கும் எதிராக செயல்படும் என்ற எண்ணம் தென்னிலங்கையில் பல வாக்காளர் மத்தியிலும் இருக்கிறது.

**அவல நிலை**

இதற்கு அப்பாலும் இன்னொரு விடயம் இருக்கிறது. தென்னிலங்கை மற்றும் தமிழர் பகுதிகளில் பல அரசியல் திறனாய்வாளர்கள் ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் எதிர்காலம் சூன்யமான ஒன்று என்றே கருதுகிறார்கள். ஆனால், ரணில் தரப்பு என்னவோ அதனை நம்ப தயாராக இல்லை என்றே தோன்றுகிறது.

அவர்களை பொறுத்தவரையில், ராஜபக்சாக்கள் இன்றளவும் 30- முதல் 35 சதவீத வாக்குகளை பெற்று விடமுடியும் என்று நம்புவதாகவே கருத இடமிருக்கிறது. ஜனாதிபதியாக கோத்தபாயவின் முடிவுகளும் செயல்திட்டங்களும் தேசத்திற்கு அனைத்துவகையான பொருளாதாரநாசங்களையும் கொண்டு வந்தது என்பதே அனைவரின் ஒருமித்த கருத்து. என்றாலும், தேர்தல் என்று வந்து விட்டால், தென்னிலங்கையின் உள் பகுதி கிராமங்களில், மஹிந்த ராஜபக்சவின் கருத்திற்கும் கோரிக்கைக்கும் ஏன் முறையீட்டிற்கும்கூட மதிப்பு இருக்கும் என்றே நடுநிலை அரசியல் விற்பனர்கள் கருதுகின்றனர். அவ்வாறே ரணில் தரப்பும் கருதுவதாக தோன்றுகிறது. இல்லை என்றால், அவர் இன்னமும் ராஜபக்சக்களிடம் தொங்கி கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதேசமயம், ராஜபக்சக்களுக்கும் தங்களது தற்போதைய அவல நிலை நன்றாகவே புரிந்திருக்கிறது. ரணில் ஆதரவு என்ற போர்வையில் கடந்த சுமார் இரண்டு ஆண்டுகள், அவர்கள் தங்களது மொட்டு கட்சி உடைந்து விடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், ரணில் ஆதரவு அமைச்சர்கள் எண்ணிக்கை அதிகம்தான் என்றாலும், அவர்களில் ஒரு சிலரைத் தவிர பிறருக்கு தொண்டர் ஆதரவு பெரிய அளவில் இருந்தது இல்லை.

அவ்வாறு இருந்திருந்தாலும், அதில் பெரும்பான்மை, மஹிந்தாவின் செல்வாக்காலும், சொல்வாக்காலுமே வந்தவை. அதில், கணிசமான ஒரு பகுதியையாவது மஹிந்தாவின் முறையீடும் பசில் ராஜபக்சவின் அரசியல் சாதுர்யமும் மீட்டெடுத்துவிடும் என்பதே அவர்களது கணக்கு என்றே கருதத் தோன்றுகிறது. அதில், அவர்கள் வெற்றி பெறுவார்களா, இல்லை தோல்வி அடைவார்களா, என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இந்தப் பின்னணியில், ரணில், மஹிந்த, பசில் ஆகிய மூவரும் அடுத்துவரும் நாட்களில் கூடிப் பேச இருக்கிறார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# எதிர்வினையாற்றும் ஆளுமை

4ம் பக்க தொடர்ச்சி...........

அவ்வாறான ஒரு பேச்சு நிகழ்ந்தால், அதற்குப் பின்னர், ஜனாதிபதித் தேர்தலுக்கான இரு தரப்பு நிலைபாடுகளும் தெளிவு பெறும் என்று எதிர்பார்க்கலாம். அதாவது, இரு தரப்பினரும் எதிர்காலத்திலும் ஒரு சேர பயணிக்கப் போகிறார்களா, இல்லையா எனற கேள்விக்கு விடை கிடைக்கும்.

இதற்குமுக்கியகாரணம்உண்டு.தொழிலாளர் தினமான எதிர்வரும் மே தினத்தன்று, அனைத்து அரசியல் கட்சியினரும் முக்கியமாக தலைநகர் கொழும்பில் தனிதனியாக ஊர்வலம் மற்றும் பொதுகூட்டம் நடத்துவார்கள். சில அரசியல் கட்சிகள், தங்களது முக்கியத்துவம் காணாமல் போய்விடக்கூடாது என்று, கண்டி போன்ற உள் நகரங்களில் கூட மே தின ஊர்வலத்தை நடத்தி காட்டுவார்கள். தேர்தல் நடைபெறும் வருடங்களில் அவற்றின் முக்கியத்துவம் அதிகமாகவும் அதீதமாகவும் இருக்கும்.

தமிழர்தரப்புவழமையாக, யாழ்பாணத்திலும், திருகோணமலையிலும், மட்டகளப்பிலும் போட்டி ஊர்வலங்கள் நடத்தி வந்துள்ளார்கள். இந்தமுறை அவற்றில் ஒன்று, கிளிநொச்சியில் மையம் கொண்டால், அதுவும் எதிர்பார்க்கப்பட வேண்டிய விடயமே.

வைத்தால் குடுமி...

ஆனால், தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் மே தின ஊர்வலங்கள் இந்த முறை, ஜனாதிபதி தேர்தலுக்கான கூட்டணியை ஒட்டியே இருக்கும். கடந்த ஆண்டுகளை போலவே, சஜித்தின் மக்கள் சக்தி தனியாக மேடையேறும். அவருக்கு ஆதரவான 'சிறுபான்மை' முஸ்லிம் மற்றும் மலையக கட்சிகள், ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று இன்னமும் முடிவு எடுக்கவில்லை. ஆனால், அவர்களில் பெரும்பான்மையானோர், ரணில்- - சஜித் கூட்டில் ரணிலே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று விரும்புகின்றனர் என்று கூறப்படுகிறது.

அவ்வாறான ஒரு கூட்டு உருவாகுமானால், ரணில், மொட்டு கட்சியை கண்டு கொள்ளாமல் விட்டுவிடலாம். அவ்வாறான மக்கள் சக்தியுடனான கூட்டு பிரிதொரு நாளில் நடந்தேறினாலும், அன்றும் ரணில், ராஜபக்சக்களை தயவு-தாட்சண்யம் இல்லாமல் கழற்றி விட்டுவிடுவார். அது மஹிந்த தரப்பினரும் நன்கு அறிந்த விடயம்.

மற்றபடி, ராஜபக்சதரப்பு, தனித்துவிடப்பட்டால் என்ன செய்வது என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை. தங்களுக்கு உண்மையிலேயே 30 சதவீத வாக்காளர் ஆதரவு இருந்தால், அதனை இப்போது விட்டால் எப்போதுமே தக்கவைத்துக் கொள்ள முடியாது என்பதும் அவர்களுக்கு புரிந்த விடயம். அவ்வாறில்லாமல், அவர்களுக்கு உண்மையிலேயே மக்கள் ஆதரவு சிறிதுகூட இல்லை என்றால், அவர்கள் இப்போதே தங்களது அரசியல் கூடாரத்தை காலி செய்துவிட்டு சென்று விடலாம்.

ராஜபக்சக்களை பொறுத்தவரையில், அவர்களுக்கு வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை என்ற நிலைமை. எனவேதான், அடுத்த தலைமுறைக்கும் கட்சி சிதையாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், பசில் இடத்தில், இளைஞரான மஹிந்தவின் மகனான நமால் ராஜபக்சவை மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளராக அறிவித்துள்ளனர். ஒருகுறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், அவரேகூட கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இந்தமுறை கூட களமிறங்கும் கட்டாயம் தோன்றலாம்.

இதில் எது நிஜம், எது நிழல் என்பது, ரணில், மஹிந்த, பசில் ஆகிய மும்மூர்த்திகளின் சந்திப்பில் மட்டுமே தெரியவரும். அல்லது, தெரிய வரலாம்.

எது எப்படியோ, ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தல் இடம் பெறவேண்டும் என்று பசில் கொளுத்தி போட்டதில், ரணில் ராஜபக்சக்களுடன் பேச்சு நடத்தவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. அதுவே இன்று பூதகாரமாக உருவெடுத்து வருகிறது!

# இராமகிருஷ்ணர் திருக்கோவிலில் ஸம்ப்ரோக்ஷண விழா காரைதீவில்

(வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷனின் காரைதீவுசாரதாநலன்புரிநிலையத்தில் புனரமைக்கப்பட்ட ஸ்ரீராமகிருஷ்ணரின் திருக்கோவில் ஸம்ப்ரோக்ஷண விழா எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமைநடைபெற இருக்கிறது.

இராமகிருஷ்ணமிஷன்மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற இருக்கின்ற இந்த விழாவில், இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கிறார்.

அன்றையதினம்வேதமந்திரங்கள், மங்களாரதி, திருப்பள்ளியெழுச்சி, கோயில் வலம், கொடியேற்றம், பூஜை, பஜனை, ஹோமம் ,சிறப்பு ஆரதி, சொற்பொழிவு என்பன இடம்பெற இருக்கிறது.(05)

# பொலிஸாரின் யுக்திய நடவடிக்கையில் 9 பெண்கள் உட்பட 703 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள் ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது 9 பெண்கள் உட்பட 703 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட 10 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ்ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

போதைப்பொருளுக்கு அடியா கவுள்ள 6 சந்தேகநபர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தயுக்தியநடவடிக்கையின்போது மேல்மாகாணத்தில்மேற்கொள்ளப்பட்ட 416 சுற்றிவளைப்புகளில் 410 ஆண்களும் 6 பெண்களும் சந்தே கத்தின் பேரில் கைது செய்யப்பட் டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் , ஐஸ் மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(05)

# விஷ பூச்சி கடிக்குள்ளானவர் யாழில் பரிதாபமாக இறப்பு

*யாழ்ப்பாணத்தில் காதின் கீழ் பகுதியில் விஷ பூச்சி கடித்ததில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*52வயதுடையசண்முகவேல் அருட்செல்வம் என்பவரே உயிரிழந் துள்ளார்.*

*கடந்த 14 ஆம் திகதி இவருக்கு காதின் கீழ் பகுதியில் விஷ பூச்சி ஒன்று கடித்துள்ளது. வலி தீவிரமடைந்ததை அடுத்து கடந்த திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.*

*(05)*




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சிறப்புற்ற மீனாட்சி அம்மன் துவி உற்சவம்





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற தேசத்து ஆலயமாம் நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் துவி வருடாந்த அலங்கார உற்சவம் தினமும் பகல்பூஜையாக சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

இரண்டாவது அலங்கார உற்சவம் புதுவருடத்தில் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது .

உற்சவகால பிரதம குரு சிவாகமவித்யா பூஷணம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆலய குருசிவஸ்ரீச.கோவர்த்தனசர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள்



யாவும் நடைபெற்று வருகின்றன.

தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவ திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது .

19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாற்குட பவனி இடம் பெற ஏற்பாடாகி உள்ளது.

இந்த பத்து நாள் அலங்கார உற்சவ திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்குகும்பபூஜையுடன்ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூஜை, அம்பாளின் வீதியுலா இடம்பெறுகின்றன. அதனைதொடர்ந்து பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்படுகிறது . இரவு நேர பூஜை திருவிழாக்கள் இடம்பெறமாட்டாது என்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி கே. ஜெயசிறில் தெரிவித்தார்.

தேசத்து ஆலயமாக விளங்குவதால் பத்து தினங்களுக்கான உற்சவகால திருவிழாக்களையும் அன்னதானத்தையும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களான சம்மாந்துறை விநாயகபுரம் பொத்துவில் ஆலையடிவேம்பு நாவிதன்வெளி கல்முனை காரைதீவு நிந்தவூர் திருக்கோவில் ஆகிய கிராமங்கள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றன.(05)

# சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பியோடிய இரு கைதிகள் மீளவும் கைது

யாழ்ப்பாணம் – சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பியோடிய கைதிகள் சுமார் 30 நிமிட இடைவெளியில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதி ஒருவரும், விளக்கமறியலில்தடுத்துவைக்கப்பட்டுள்ளஒருவரும் வழக்கொன்றுக்காக யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து, சாவகச்சேரி நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

அவர்களை சுமார் 30 நிமிட இடைவேளையில் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதனை அடுத்து, தப்பியோடிய இருவருக்கு தலா 6 மாத கால சிறைத்தண்டனை விதித்த சாவகச்சேரி நீதிவான், ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதித்தார். தண்ட பணத்தைக் கட்டத் தவறின் மேலும் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுவிக்க வேண்டும் என தீர்ப்பளித்தார்.

(05)

# அல் அக்ஸா பாடசாலையில் சிறப்புற நடந்த சிரமதானம்

(சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட சிரமதான பணி பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எப் சாஜினாஸ் தலைமையில் இடம்பெற்றது.



இச் சிரமதான பணிக்கு பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன முழுமையான பங்களிப்பை வழங்கியதுடன் பாடசாலையின் ஆசிரியர்கள் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் மற்றும் பழைய மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் இச் சிரமதானபணியில்கலந்துகொண்டு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.



அல் அக்ஸா தேசிய பாடசாலையின் சுற்றுப்புறச்சூழலை முழுமையாக சுத்தப்படுத்தி நீண்ட விடுமுறையின் பின் பாடசாலைக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் மனங்களில் புத்துணர்ச்சியும் உத்வேகமும் ஏற்படச்செய்யும் வகையில் பாடசாலையின் சுற்றுப்புறச்சூழலை சிரமதானத்தின் ஊடக ஏற்படுத்தி தந்தமைக்கு பாடசாலையின் நிர்வாகம் சார்பாக இச்சிரமதான பணியில் பங்குபற்றிய மற்றும் இதற்கு உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிய சகலருக்கும் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதாக பிரதி அதிபர் எஸ் எம் சாஜினாஸ் தெரிவித்தார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## இளைஞர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற ரீதியில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் தெரிவித்த அவர்கள், நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான தமது முன்மொழிவுகளையும் முன்வைத்தனர்.

இளைஞர் சமூகத்தை வலுவூட்டுவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பிராந்திய இளைஞர் நிலையங்களை நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அப்பிரதேச இளைஞர்மையங்கள்மூலம்இளம் தொழில்முனைவோரைவளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும், அதற்காக வங்கிக் கிளைகளின் முதன்மை அலுவலர்கள் மற்றும் வர்த்தக சங்க உறுப்பினர்களை ஈடுபடுத்ததிட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நுவரெலியா மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற வேட்பாளர் அசோக ஹேரத், தாம் வேறொரு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொள்கின்றேன் எனவும் தான் அந்த வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு2025ஆம்ஆண்டு நிறைவடையவிருந்த 'யழி புபுதமு ஶ்ரீலங்கா' வேலைத்திட்டத்தை வெற்றியடைய அனைவரும் ஆதரித்திருந்தால் இன்று இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாக மாறியிருக்கும் என சுட்டிக்காட்டிய அவர், அன்று அதனை எதிர்த்த தரப்பினர்தற்போதுஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டுவரும்2048அபிவிருத்தியடைந்த நாடு வேலைத் திட்டத்திற்கு குழிபறிப்பதாகவும் தெரிவித்தார்.

அடுத்த 02 வருடங்களில் நாட்டில் புரட்சிகரமான மாற்றத்தை மேற்கொண்டு 10 வருடங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நாட்டின் தலைமைப் பதவிக்கு நியமிக்க தேவையான ஆதரவை வழங்குவோம் என அசோக ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

## இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகம் எமக்குள்ளது.

ஜனாதிபதி அடைய வேண்டுமென்று நினைத்த எந்தவொரு இலக்கும் அடையப்படவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியும், வடக்கு, கிழக்கு மக்களும் அவருக்கு ஆதரவளிப்பார்கள் என்று அவர் கருதினார். அவருடைய இத்தகைய எண்ணங்களும், கணக்குகளும் வெறும் கனவுகளாகிவிட்ட. ஆகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கோள் காட்டி புளும்போர்க் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடன் வழங்குநர்கள் முன்வைத்துள்ள மைக்ரோ லிங் பொண்ட் முறைமையே, இறையாண்மை பத்திர மறுசீரமைப்பைஏற்படுத்துவதற்கான பிரதானதடையாகக்காணப்படுவதாக இலங்கை ஆளும் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறைக்கமைய, பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட பொருளாதார முன்னேற்றங்களின் அடிப்படையில், இறையாண்மை பத்திர உரிமையாளர்களுக்கான நன்மைகள் தீர்மானிக்கப்படும் என்றும் ஆளும் தரப்பு குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, 12.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இறையாண்மைப் பத்திரங்களை மறுசீரமைப்பதற்கு இதுவரை இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை என நிதியமைச்சு புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், இணக்கப்பாடு தாமதம் அடைவதனூடாக குறித்த கலந்துரையாடல், இந்த ஆண்டில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தல் வரை காலதாமதமடைவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக, இறையாண்மைபத்திரமறுசீரமைப்பு தொடர்பிலான இணக்கப்பாட்டை விரைவுபடுத்துவதன் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## சுதந்திரக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குஎதிராகச்செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களில்பெரும்பாலானவர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்திலிருந்து ஒவ்வொரு ஆளும் தரப்பிலும் அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களாவர். எமதுநல்லாட்சிக் காலத்திலும் அவர்கள் அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளனர்.

இவர்களே அண்மையில் அரசியல் குழு கூட்டத்தை நடத்தி புதிய நியமனங்களையும் வழங்கியுள்ளனர். இறுதியில் தற்போதைய ஜனாதிபதி சுதந்திரக் கட்சியின்தலைவரானதன்பின்னரே இந்தப் பிரச்சினைகள் முடிவுக்கு வரும் என்றார்.

## மியன்மர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர் தடுத்து வைக்கப்பட்டு கணினி குற்றச்செயல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனர்என்பதை நாம் அறிக்கையிட்டிருந்தோம்.

இதனிடையே, மியன்மாரில் கைதுசெய்யப்பட்டிருந்தநிலையில், பொது மன்னிப்பு வழங்கப்பட்ட இலங்கைமீனவர்கள்15பேரையும் இம்மாதத்திற்குள் நாட்டிற்கு அனுப்பிவைக்க முடியும் என மியன்மாருக்கானஇலங்கைதூதுவர் ஜானக பண்டார தெரிவித்துள்ளார்.

மியன்மார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 15 இலங்கை மீனவர்கள் கடந்த டிசெம்பர் 2ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

## ஒக்டோபர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்விதமான ஒரு தலைவருக்கு வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பில் ஆலோசனை வழங்க வேண்டிய தேவை இல்லை. அதேபோன்று நிதி தொடர்பான விடயங்களையும் கொடுக்கல் வாங்கல்கள்தொடர்பில்கையாளவும் அவருக்கு ஆலோசனை வழங்குவதற்குத் தனியாக நபர் ஒருவர் தேவையில்லை.

சர்வதேச நாடுகளுடனான உறவுகள் தொடர்பில் கையாள்வதற்கும் கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டாலும்வேறொரு குழுவினரே தீர்மானங்களை எடுப்பதாகச் சிலர் குற்றஞ்சாட்டுகின்றார்கள். இது தொடர்பில் அனைவரும் தெளிவடைய வேண்டியது கட்டாயமாகின்றது.

கடந்தகாலங்களில்அவ்வாறான தலைவர்கள் தான் நாட்டை வழிநடத்தினார்கள். அதனால்தான் நாடு இத்தகைய நிலைமையை அடைந்துள்ளது. எனது நண்பர் ஒருவர் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குவருகைதந்திருந்தார். அவர் முச்சக்கர வண்டியில் கல்கிசைக்குச் சென்றிருந்தார். நாட்டின் நிலைமை என்னவென்று முச்சக்கரவண்டியின் சாரதியிடம் எனது நண்பர் வினவியுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு புண்ணியம் கிடைக்கட்டும் என்று அந்த முச்சக்கரவண்டியின் சாரதி கூறியுள்ளார். அதுதான் நிலைமையாக உள்ளது - என்றார்.

### காலை, நண்பகல் நேரங்களில்

# பாடசாலைச் சூழலில் இனிமேல் கனரக வாகனங்களுக்குத் தடை





யாழ். மாவட்டத்தில் பாடசாலை ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் நேரத்தில் பாடசாலை சூழலில் கனரக வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டசெயலகத்தில்வடக்குமாகாணஆளுநர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இன்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதிகளில், பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்கள் வேகமாகவும் வீதி அபிவிருத்தி சட்டவிதி முறைகளைக் கருத்தில் கொள்ளாமலும் செல்வதால் மாணவர்கள் கல்வி நடவடிக்கை களுக்காகவும், பின்னர் வீடு செல்லும் போதும் விபத்துக்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்தே கனரக வாகனங்களுக்குத் தடைவிதிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதேவேளை போட்டி போட்டு வாகனங்களைச் செலுத்தும் அரச மற்றும் தனியார் பேருந்துகளால் வீதியில் செல்லும் மக்கள் அதிக அசௌகரியங்களை சந்தித்து வருவதால் அது குறித்து குறித்த தரப்பினர் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இவ்வாறு செயற்படும் தரப்பினரை உரிய நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டும் எனவும் பொலிசாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## வீதிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கினோம். மேலும், தொழிலாளர் கொள்கை குறித்து மீண்டும் விவாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குவதற்கு தொடர்புடைய கொள்கையையும் அறிமுகப்படுத்தி. தொழிலாளர் சட்டத்தையும் மாற்றினோம். வெளிநாட்டு வேலைவாய்ப்புபணியகசட்டத்தை மாற்றி கொள்கை மாற்றத்தை உருவாக்கவும் முடிந்தது.

அவ்வாறே எங்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தையும் தொழிலாளர் துறையையும் டிஜிட்டல் மயமாக்க முடிந்ததுள்ளது. வெள்ளையர்களின் காலத்தில் நினைத்துக்கூட பார்க்காத ஒவ்வொரு தொழிலாளிக்கும் கௌரவத்தை வழங்கும் கருசரு திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம்.

எம்மால் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய மிக அடிப்படையான கொள்கை மாற்றத்தை உருவாக்க முடிந்தது. இதற்கு அமைச்சில் உள்ள அனைவரும்உறுதியாகஇருந்தனர். இதுதான் உண்மையான போராட்டம். அதாவது அனைத்து அரசுஊழியர்களும்ஒன்றிணைந்து கடுமையாகஉழைத்துகொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

கடுமையாகஉழைத்துநாட்டைக் கட்டியெழுப்புவது உண்மையான போராட்டம். பல வருடங்களாக செய்யமுடியாதகாரியங்களைஇந்த இரண்டு வருடங்களில் நாங்கள் செய்து முடித்துள்ளோம் என்றார்.

# சேவை நலன் பாராட்டு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனைக் கல்வி வலயத்தில் மிக நீண்ட காலமாகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச்செல்லும்விஞ்ஞானப் பாட ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ். ஸூஹறதுல்அமீன்அவர்களைசேவை நலன் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை கல்முனை கமு/கமு/இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர்ஏ.ஜீ.எம். றிசாத்தலைமையில் மிக சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்றுச் செல்லும் எம்.எஸ். ஸூஹறதுல் அமீனின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு மற்றும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப் பட்டார்.



இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் விஞ் ஞானப்பாட ஆசிரியர்கள்கலந்து கொண்டனர். (05)



# ஏப். 10 நோன்பு பெருநாள் தினத்தை விசேட விடுமுறையாக அறிவிக்குக

## அரச பொதுச் சேவைகள் சங்கம் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம்களின் புனித நோன்பு பெருநாள் தினமான ஏப்ரல் 10 ஆம் திகதியை இலங்கையில் விசேட விடுமுறையாகப் பிரகடனப்படுத்துமாறு இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ புஹாது பொது நிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சருக்கு புதன்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் -

இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் அனைவரும் புனித ரமலான் நோன்பு பெருநாளை தமது மத கலாசார விழுமியங்களுக்கு அமைவாக ஏப்ரல் 10 ஆம் திகதி அனுஷ்டித்தனர்.

இத்தினம் அரச அலுவலக வேலை நாளாக உள்ளமையால் குறித்த தினம் சொந்த விடுமுறையில் பெரு நாளை கொண்டாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையைக் கருத்திற் கொண்டு இலங்கை முஸ்லிம்களின் புனித நோன்பு பெருநாள் தினமான ஏப்ரல் 10 திகதியை முஸ்லிம் அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட விடுமுறை தினமாக பிரகடனப் படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(05)

# இசைக் குழுவினர் சென்ற வான் கால்வாய்க்குள் வீழ்ந்து விபத்து



பொலன்னறுவைஎஃபெக்ட்பேண்ட் இசைக்குழுவினர் பயணித்த வான் ஒன்று கால்வாய்க்குள் கவிழ்ந்துள்ளது.

பொலன்னறுவை ஓங்கம பிரதேசத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு புதன்கிழமை காலை திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் இசைக்குழுவினர் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. வான் சேதமடைந்துள்ளது.

அதே இசைக்குழுவைச் சேர்ந்த கலைஞர் ஒருவரே வானை செலுத்திச் சென்றுள்ளார்.(05)

# திரியாய் தமிழ் மகாவித்தியாலயத்தின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகிட்டுமா?





திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப் புறத் தமிழ்க்கிராமங்களில் ஒன்றான திரியாய்க்கிராமத்தின் திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தின் குடிநீர்ப் பயன்பாட்டுக்காக கிணறு ஒன்று காணப்படுகிறது.

சுமார் 200 இற்கு மேற்பட்ட மாணவர்கள் காணப்படுகின்ற இந்த பாடசாலையில் மாணவர்களுடைய தண்ணீர் தேவைக்குப் பிரதானமாகக் காணப்படுவது இந்தக் கிணறு மாத்திரமே. இந்தக் கிணற்றில் இருந்தே மோட்டார் மூலமாக தாங்கிகளுக்குப் பெறப்படுகின்ற நீர் மாணவர்களுடைய தண்ணீர் தேவைக்காக விநியோகிக்கப்படுகிறது.

இந்தக் கிணறானது மூடப்படாமல் திறந்த நிலையில் இருப்பதால் மிகவும் மாசடைந்த நிலையில் காணப்படுகிறது. எனினும், இந்த நீரையே மாணவர்கள் தமது நீர் தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றார்கள். மேலும் உணவு சமைப்பதற்கும் இதே கிணற்று நீரே பயன்படுத்தப்படுகின்றது.

RDS நிறுவனத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட நீர் சுத்திகரிக்கின்ற இயந்திரம் கொண்ட தொகுதி பாடசாலைக்கு அருகிலே பாடசாலை வளாகத்தினுள் இருக்கின்ற போதிலும், அது தற்போது நீண்ட காலமாக பாவணைக்கு உட்படுத்தப்படாத நிலையில் பூட்டி வைக்கப்பட்டதாக காணப்படுகிறது. அந்த நீர் சுத்திகரிப்பு தொகுதி பயன்படுத்தப்படாமையால் மாணவர்கள் இந்த அழுக்கடைந்த நீரையே பருக வேண்டிய தேவை ஏற்படுகிறது. இது நீர் சார்ந்த நோய்களை ஏற்படுத்தக்கூடியதாகக் காணப்படுகிறது.

எனவே, அதிகாரிகள் இந்த நீர்சுத்திகரிக்கின்ற தொகுதியை இயக்குகின்ற அளவிற்கு அதனை முன்னேற்படுத்தி மாணவர்களுடைய நீர் தேவைக்கு சிறந்த தீர்வை பெற்றுத்தர முன்னேற வேண்டும். தற்பொழுது அதிகரித்து வருகின்ற வெயில் நிலைமையில் மாணவர்கள் அதிகமாக தண்ணீர் தேவையை இந்த நீரின் மூலமாகவே பெற்றுகொள்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (05)

# பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனின் மறைவு சைவத்தமிழ் உலகுக்கு பேரிழப்பு ஆகும்

## யாழ். அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் இரங்கல்



பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனின் மறைவு சைவத்தமிழ் உலகுக்கு பேரிழப்பாகும் என அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் (யாழ்ப்பாணம்) செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவித்தவை வருமாறு -

நூற்றாண்டு கடந்த வரலாற்றைக் கொண்டதும், ஈழத்தின் பழம்பெரும் அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்டதும், பல பண்டிதர்களை இத்தமிழுலகுக்கு அளித்ததுமான ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை கடந்த 40 வருடங்களாக போற்றிப் பணியாற்றிய பெருந்தமிழ்மகன். தமிழ் மூச்சே உயிர்மூச்சு என்ற அசையாத நம்பிக்கையோடு சங்கத்தை திறம்பட வழிநடத்தி பண்டிதர் மரபை நம் மண்ணுக்கு அளித்த பெருமகனார்.

தமிழோடு சைவத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக சைவப்புலவர்களை இம்மண்ணில் பிரசவிக்க வேண்டும் எனும் பேரவாவின் காரணமாக மரபுவழி குரு மரபில் இலக்கணத்தை தோற்றுவித்த நாவலர் பெருமான் உருவாக்கிய நாவலர் மகா வித்தியாலயத்தில் மூன்று தசாப்தத்துக்கு மேலாக இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலக்கண பாடத்தை இலகுபாடமாக்கி கற்பித்த நல்லாசான் ஆவார்.

தொல்காப்பியத்தை விருப்புடனும் அனைவர் மனதிலும் பதிந்து விருப்புடன் கற்க இலகுபடுத்தி கற்பித்த பெருமகனார்.

காப்பியதாசன் என்று போற்றப்படும் தொல்காப்பிய விற்பன்னன். தொல்காப்பியத்தை கற்பிப்பதில் இவருக்கு இணையாக யாரையும் ஒப்பிட இயலாத பெருந்தகை.

தொல்காப்பியத்தோடு நன்னூல், நன்னூல் கண்டிகையுரை ஆகியவற்றையும் விருப்புடன் கற்பித்து இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பட்டத்தின் ஒரு பாடத்துக்குரிய இலக்கண பாடத்தை மாணவர்கள் கற்று சித்தியடையச் செய்தவர்.

நீண்டகாலமாக சைவப்புலவர் பட்டப் பரீட்சைக்குழுவில் இலக்கண வினாத்தாள் தயாரிப்பாளராக, மதிப்பீட்டாளராக நடுநிலையுடன் இரகசியத்தன்மையுடன் பணியாற்றி, சைவப்புலவர் சங்கத்தின் மூத்த சைவப்புலவர்களால் நன்மதிப்பைப் பெற்றவர். குறுகிய சில வருடங்களாக தன் உடல் நிலை காரணமாக இப்பணியில் இருந்து விலகியிருந்தார்.

சைவத்தமிழ் மரபில் தமிழ்ப் பண்டிதர்களையும் சைவப்புலவர்களையும் உருவாக்கிய பெருமகனார் பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் அவர்கள் தமது இவ்வுலக வாழ்வை நிறைவு செய்துகொண்டார்.

பிறந்தவர் மண்ணில் மறைவது இயல்பு என்ற சிந்தனைக்கமைய காலம் தன் கடமையை நிறைவேற்றியுள்ளது. உயர் தமிழ் மகனாரின் ஆத்மா பார்வதி சமேத பரமேஸ்வரனின் பாதார விந்தங்களை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு வாழப் பிரார்த்திக்கின்றோம்.

பண்டிதமணி ஐயாவுக்கு வெறும் இரங்கல்களையோ அனுதாபங்களையோ தெரிவித்துவிட்டு கடந்துவிடும் இழப்பல்ல இந்த இழப்பு. அசராத தமிழ்ப்பாண்டித்தியத்தின் ஒரு தலைமுறையின் இழப்பு. கடந்துவந்த பல தசாப்தங்களில் புலமையையும் தமிழ்மரபுக்கல்வியையும் கடத்திவந்த, காவி வந்த, தொடரின் ஒரு பெரும் அத்தியாயம் இவர்.

ஈழத்து மரபுத்தமிழ் கல்வி வரலாற்றில் அழித்துவிட முடியாத எங்கள் பண்டிதர் ஐயாவுக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சார்பில் அஞ்சலிகளை செலுத்தி நிற்கிறோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நிற்கின்றோம்... என இரங்கல் தெரிவித்துள்ளார். (05)




# ஆறுமுகத்து அழகர்கள்



» நல்லூரின் தலைமை மூர்த்தியாக யாவரும் கொண்டாடும் பெருமான் ஷண்முக நாதன்.

»

» 1916-1920 காலப்பகுதியில் பிரதிஷ்டிக்கப்பட்ட இம்மூர்த்தி நூற்றாண்டைக் கண்ட மூர்த்தி.

» தினம் தினம் ஷண்முகார்ச்சனைகளால் அருள் உரு பெற்று திருவோடு திகழும் இவரது சபையும் விமானமும் 2018 ல் (பிரதிஷ்டையின் நூற்றாண்டு ) தங்கம் வேயப்பட்டிருக்கிறது.

» சிதம்பரம் நடராஜ ராஜ மூர்த்திக்கான சிறப்புகளோடு நல்லூரில் பொற்சபையில் காட்சி தரும் இப்பெருமானின் சபை சிதம்பரம் பொற்சபை மற்றும் விமான வடிவத்தை கொண்டிருப்பதோடு இந்த கும்பாபிஷேக வைபவமும் தீக்ஷிதர்களால் செய்து வைக்கப்பட்டது.

» தேவியருடன் சித்ர மயூராசனத்தில் காட்சி தரும் ஷண்முக மூர்த்தியின் பாத கமலங்களில் இடது பாதம் குஞ்சித பாதமாக மேல் நோக்கி காட்சி தருகிறது.

» இந்த ஷண்முகநாதரின் திருமுன்றலிலேயே கோயிலின் தீர்த்தமான ஷண்முக புஷ்கரணியும் அருகே திருமஞ்சன தீர்த்தமும் இருக்கிறது.

» முன்னே இரண்டு கோபுரம் பின்னே இரண்டு கோபுரம் அமைய நடுவே பொற்சபையில் இவர் அருள்கிறார்.

» சில செய்திகளின் வழி இம்மூர்த்தியினை உருவாக்கிய சில்பி அதே பாணியில் கொக்குவில் புதுக்கோவில் ஷண்முகரை உருவாக்கியதாக சொல்கிறார்கள். இரு மூர்த்தியும் ஒரே உயரம்- வடிவம் கொண்டவை. எனவே, ஒரே அச்சில் உருவான மூர்த்தி என்பர்.

» திருச்செந்தூர் ஷண்முகர் நின்ற கோலத்தினர். ஆயினும் அளவிலாத கோடானு கோடி அத்புதர். ஆங்கிலேயர் வியக்க வியர்வை காட்டியவர்.

» அதுபோலவே, செந்தில் ஆவணி விழா காலத்தில் விழா காணும் நல்லை ஷண்முகரும் பேரழகும் அருளும் பொலியும் பெருமான்.

» இது போலவே, மாவிட்டபுரம் ஷண்முகர் ஆயிரம் ஆண்டு பழைமையான அதி அற்புத மூர்த்தி. அவருக்கு கோடி அர்ச்சனை நடைபெற்றது. இங்கு வருகிற 2025 பங்குனி உத்தரத்தில் மகா கும்பாபிஷேகம் நிகழ்கிறது.

» இந்திர மயிலில் எழுந்தருளியிருக்கும் பொலிகண்டி கந்தவன நாயகர் ஆறு முகமும் வேறுபாடு இல்லாத அழகன். அங்கே கருவறையிலும் ஷண்முகர். பழையவர் என்றும் ஒருவர். ஆக முப்பெரும் வடிவினர்.

» இணுவில் ஷண்முகர் உலகப் பெருமஞ்சம் காண்பவர். நீர்வை கந்தன் ஆலய ஷண்முகர் பக்தர்களை பார்த்த ருளும் பாங்கினர்.

» இப்படி எல்லாம் சொல்கிற போது நான் வியந்த இன்னொரு மூர்த்தி மட்டுவில் செல்லப்பிள்ளையார் கோயிலடியில் ஒரு சிறிய கோயிலில் இருக்கிறார். அவர் கருகற்திருமேனி அழகர்.

» காரைநகர்திக்கரைஷண்முகருக்கும்தனிச்சிறப்பு உண்டு. அவர் திரிபந்தாதி பெற்ற பெருமையர்.

» திருகோணமலை வில்லூன்றி கந்தவேள் ஆலயம் அருணகிரிநாதர் பாடிய தலம். அங்கே




மூலவரும் உத்ஸவரும் ஷண்முகநாதரே. அழகிய செப்புத்திருமேனி.

» எங்கெங்கோ போனாலும் அவர் தான் எங்கும் இருக்கிறார். இருக்குமிடம் எல்லாம் அருள்கிறார்.

**நீர்வை. மயூரகிரி சிவாச்சார்யார்,**

## மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர்களின் பெயர் பலகை திறந்து வைக்கும் நிகழ்வு




(பாறுக் ஷிஹான்)

1971இல் மஹ்மூத் மகளிர் கல்லூரி என பெயர் மாற்றம் பெற்றதிலிருந்து இன்று வரை (2024) 53 வருட கால கல்வி செயற்பாட்டில் இலங்கை திருநாட்டின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் நிருவாகத்தின் கீழ் இயங்கும் மஹ்மூத் மகளிர் கல்லூரி முஸ்லிம் பெண்கள் கல்வி வளர்ச்சியில் தனக்கு என்று தனித்துவமான அடையாளத்தைக் கொண்டுள்ளது.

இதன் பின்னணியில் இக்கல் லூரியின் நீண்ட கால தேவையாகவும் வரலாற்று நிகழ்வுகளை தற்கால இளம் மாணவ சமூகத்தவர்கள் அறிந்து கொள்ளும் நோக்கில் கல்லூரி முதல்வரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயற்திட்டங்களில் ஒன்றான இக்கல்லூரியில் அதிபர்களாக கடமையாற்றியவர்களின் பெயர்கள் மற்றும் காலங்களை உள்ளடக்கிய 'மஹ்மூத் அதிபர் பெயர் பலகை' உத்தியோகபூர்வமாகதிறந்துவைக்கும்நிகழ்வு புதன்கிழமை கல்லூரியின் நிர்வாகக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் குறித்த பெயர் பலகையை இந்தக் கல்லூரியின் பழைய மாணவியும் தற்போதைய 17 ஆவது அதிபரும் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முதலாவது இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரியுமான அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இக்கல்லூரி வரலாற்றில் (1971-2024) இன்றுவரை 17 அதிபர்கள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

## ஓமான் வளைகுடா கடலில் கவிழ்ந்த கப்பலிலிருந்த 21 இலங்கைப் பணியாளர்களும் மீட்கப்பட்டனர்

ஓமான் வளைகுடா கடலில் கடும் புயலில் சிக்கி கவிழ்ந்த கப்பலின் காணப்பட்ட 21 இலங்கை பணியாளர்களை ஈரானிய அவசர சேவைகள் பிரிவு காப்பாற்றியுள்ளதாக அரச ஊடகம் புதன்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

குக் தீவுகளின் கொடியுடன் எண்ணெய் ஏற்றிச் சென்ற கப்பல் தெற்கு நகரமான ஜாஸ்கில் இருந்து சுமார் 50 கிலோமீற்றர் (30 மைல்) தொலைவில் கவிழ்ந்ததாக அதிகாரபூர்வ ஐஆர்என்ஏ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

'ஒரு மீட்புக் கப்பல் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டது மற்றும் 21 பணியாளர்கள் காப்பாற்றப்பட்டனர்' என்று ஜாஸ்க் துறைமுகங்கள் மற்றும் கடல்சார் நிர்வாகத்தின் இயக்குநர் முகமது அமீன் அமானி தெரிவித்துள்ளார்.

(05)

## 17 வயது மகள் 5 வருடங்களாக துஸ்பிரயோகம் இங்கிரியவில் பொலிஸாரினால் தந்தை கைது

மனைவி உயிரிழந்ததையடுத்து தனது 17 வயது மூத்த மகளை 5 வருட காலமாக பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் தந்தை இங்கிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவரது மனைவி 6 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார் எனவும் இதனையடுத்து இவர் தனது மூத்த மகளை சுமார் 5 வருட காலமாகப் பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ள நிலையில் அவர் தனது இரண்டாவது மகளையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற போது அதனைக் கண்ட மூத்த மகள் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது இரண்டாவது மகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபருக்கு எதிராக அவிசாவளை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபர் குறித்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் ஆஜராவதைத் தவிர்த்து வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சந்தேக நபரின் ஒரு பிள்ளை சுகவீனமடைந்துள்ளதுடன் சுகவீனமடைந்த பிள்ளையை தன்னால் பராமரித்துக் கொள்ள முடியாததால் இவர், தனது பிள்ளையை உயிரிழந்த மனைவியின் சகோதரியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர் வீட்டின் உரிமையாளரான உயிரிழந்த மனைவியின் சகோதரி மூன்று பிள்ளைகளையும் இங்கிரிய பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என இங்கிரிய பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# லைகா ஞானம் அறக்கட்டளையினால் பொற்கேணி மக்களுக்கு குடிநீர் வசதி










லைகா ஞானம் அறக்கட்டளையின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எஸ்.பி. பொற்கேணி கிராமத்தில் மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு அமைக்கப்பட்ட மூன்று குழாய் நீர் கிணறுகள் புதன்கிழமை காலை வைபவ ரீதியாகதிறந்துவைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் குறித்த கிராம மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறித்த கிராமத்தில் குடிநீருக்காக மூன்று குழாய் நீர்கிணறுகள் அமைக்கப்பட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார்மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மத தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் லைக்காவின் ஞானம் அறக்கட்டளைபணியாளர்கள் இணைந்து வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

இதன் போது தமது கிராமத்தை அண்டிய ஏனைய கிராமங்களில் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட போதும், தமது கிராமத்தில் இதுவரை குடிநீர் வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை எனவும் இதனால் தாம் பல வருடங்களாக குடி நீர் வசதி இன்றி பல்வேறுதுயரங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர் எனவும்தற்போதுலைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த உதவி தமக்கு பாரிய பேருதவியாக அமைந்துள்ளதாக அக்கிராம மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.04.2024இல் வெளியிடப்பெற்றது